ஜூலை & ஆகஸ்டு – 2025
(மடல் - 25) செய்தி – 7



"உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்." [மத்தேயு 6:8]

தூது
நற்செய்தி துணுக்குகள்

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA
25 Years
2000
2025
CSI Tamil Parish - Abu Dhabi

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 23 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

**"உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்." [மத்தேயு 6:8]**

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன்!

கடந்த மாதம் முழுவதும் நாம் நடந்து வந்த வழிகளிலெல்லாம் ஆண்டவரின் கரம் நம்மோடிருந்து நம்மை வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தரின் பெரிதான கிருபையினால் ஆகஸ்ட் மாதத்தில் நமது தேசத்தின் சுதந்திர தினத்தைக் நாம் கொண்டாட இருக்கிறோம். ஆண்டவர் நமக்குத் தந்த நல்ல தேசத்திற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதோடு, நமது இந்திய தேச மக்களுக்காக ஜெபிக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஜெபம் அல்லது இறைவேண்டல் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் உயிர்த் துடிப்பாக அமைந்திருக்கிறது. திருச்சபையின் வரலாற்றில் ஜெபம் எவ்வளவு ஆற்றல் மிகுந்த பணியைச் செய்திருக்கிறது என்பதையும் காணலாம். அதே வேளையில் இன்றையத் திருச்சபைகளில் ஜெபத்தைக் குறித்த தவறான புரிதல் இருப்பதையும் காணமுடிகிறது. இறைவேண்டலைக் குறித்து அறிந்துகொள்வோம்.

ஜெபம் என்கிற வடமொழிச்சொல்லுக்கு மந்திரம் ஓதுதல் (Chanting) என்று பொருள். கடவுளின் பெயரையோ அல்லது வேறு மந்திரச்சொற்களையோ வாயில் சொல்லிக் கொண்டிருப்பதால் (ஓதிக்கொண்டிருப்பதால்) கடவுளின் ஆசியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது, எல்லா சமயங்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இந்த மந்திரச் சொற்கள் வழியாகத் தெய்வங்களைக் கவர்ந்துவிட முடியும் என்று நம்பினார்கள். கிறிஸ்தவ சமயத்தில் இந்த மந்திரம் ஓதுதல் என்பதற்கு முற்றிலும் இடம் இல்லை. சில தவறான நபர்களால் ஆயிரம் ஸ்தோத்திரபலிகள் என்கின்ற தவறான ஜெபமுறை, Chanting என்று சொல்லுகிற மந்திரம் ஓதுதலில் இருந்து எடுத்து, இன்று திருச்சபை மக்களை மோசம் போக்குகிற பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஜெபம் அல்லது இறைவேண்டல் என்பது, அன்பும், ஆளுமையும் நிறைந்த கடவுளோடு உறவாடும், அன்பின் உரையாடலைத்தான் இறைவேண்டல் என்கிறோம். ஆள்தத்துவமும், அன்புணர்வும் கொண்டுள்ள ஓர் இறைவனோடு அன்புறவில் உரையாடி மகிழ்வதைத்தான் ஜெபம் என்று திருமறை சுட்டிக்காட்டுகிறது. இந்த உரையாடலில் அன்புதான் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

திருமறையில் கடவுள் தம்மை, இளம் கணவராக, நண்பராக, அன்புக்குரிய தந்தையாக, நல்ல மேய்ப்பனாக இவ்வாறு பல உறவுகள் வழியாகத் தமது அன்பை வெளிக்காட்டுகிறார். கடவுள்மீது வைத்திருக்கின்ற உணர்ச்சிமிகுந்த அன்பை விளக்க இளம் கணவர் என்கிற உறவுமுறையின் சொல்தான் சரியானதாக எரேமியா கருதுகிறார். ஆண்டவர் கூறுவது இதுவே, உன் இளமையின் அன்பையும் மணமகளுக்குரிய காதலையும் விதைக்கப்படாத பாலை நிலத்தில் நீ என்னை எவ்வாறு பின்பற்றினாய் என்பதையும் நினைவு கூறுகிறேன். (எரேமியா 2:2 புதிய மொழிபெயர்ப்பு). வனாந்தரப் பயணத்தில் இஸ்ரவேல் மக்களை இளவயது மணமகளைப்போன்று ஆண்டவர் காதலித்ததாக எரேமியா சொல்லுகிறார். ஆண்டவரை, அன்புக்குரியவராக எண்ணி நாம்

உரையாடினால் அல்லது ஜெபித்தால், எவ்வளவு மணிநேரம் ஜெபித்தாலும் சலிப்பே வராது, ஏனெனில் அவர் நமது அன்புக்குரியவர். நண்பர்கள் ஒருவரோடு ஒருவர் பேசுவது எத்தனை இன்பமான, உணர்ச்சிபூர்வமானதாக இருக்குமோ அப்படியே கடவுளோடு நாம் செய்கிற ஜெபமும் இருக்கவேண்டும். ஒரு சிநேகிதனோடு பேசுவதுபோல் கர்த்தர் மோசேயோடே பேசுகிறார். (யாத்திராகமம் 33:11) நண்பர்களின் உரையாடலில், சிரிப்பு, வேடிக்கை, பாராட்டு, அன்பு, கடிந்துக்கொள்ளுதல், உதவி போன்ற அனைத்துப் பண்புகளும் வெளிப்படும். நண்பர்கள் மனம் விட்டுப் பேசுவார்கள். இவ்வாறு கடவுளை நண்பனாகக் கருதி, நமது உரையாடல் (இறைவேண்டல்) இன்பமாக இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்து தம் சீடர்களிடம் சொல்லுகிறார், இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன் என்கிறார் (யோவான் 15:15).

ஆபிரகாம் கடவுளின் நெருங்கிய நண்பன் என்பதினாலே தான் சோதோம் பட்டணத்தை அழிக்கப் போகிறேன் என்பதை முன்கூட்டியே சொல்லுகிறார். சோதோம் மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற ஆபிரகாம் ஆண்டவரிடம் ஜெபம் செய்கிறார். (ஆதியாகமம் 18:23-33) நெருக்கமான நண்பனிடம் மட்டுமே இவ்வாறு உரையாட முடியும். (யாக்கோபு 2:23). யோபு கடவுளை நண்பர் போல பாவித்து விளையாட்டாகப் பேசுகிறார். என் மீறுதலை நீர் மன்னியாமலும், என் அக்கிரமத்தை நீக்காமலும் இருக்கிறது என்ன? இப்பொழுதே மண்ணில் படுத்துக்கொள்வேன், விடியற்காலத்திலே என்னைத் தேடுவீரானால் நான் இரேன் என்றான். (யோபு 7:21) யோபு ஆண்டவரை நண்பனைப் போல் பாவித்து வேடிக்கையாக நான் மண்ணில் மறைந்து கொள்வேன், நீர் தேடினால் என்னைக் காணமாட்டீர் என்கிறான். கடவுள் நம்முடைய அன்புக்குரிய நண்பர். நமது ஜெபம் அன்புக்குரிய நண்பரோடு, நாம் பேசுவது, அவர் நம்மோடு பேசுவதுமாக இருக்கவேண்டும்.

நமக்கும் ஆண்டவருக்கும் இருக்கிற உறவுகளிலே மிகச்சிறந்த உறவு தந்தை மகன் அல்லது தந்தை மகள் என்கிற உறவுதான். உலகப் பிரகாரமான தந்தையைக் காட்டிலும் பரம தந்தையின் அன்பு பெரியது என்பதைக் காணாமற்போன மகன் உவமையில் இயேசு விளக்குகிறார். (லுக்கா 15:11-32, மத்தேயு 7:10, லூக்கா 11:11) ஆண்டவர் நமது அன்புக்குரிய தந்தை என்பதால் அவருடைய பிள்ளைகளாகிய நாம், அன்புக்குரிய தந்தையிடம் உரையாடுவது போன்று நமது ஜெபம் இருக்க வேண்டும்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel

# ஆயரம்மா மடல்

***"எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருடமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை." (யாக்கோபு 5:17)***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

***எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனு'னாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருடமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. (யாக்கோபு 5:17)***

**ஜெபமே ஜெயம் தரும்:**

நாம் ஒவ்வொருவரும் ஜெபிக்கிறவர்கள்தான். ஆனால் நாம் ஜெபிக்கும் காரியத்திற்கான பதிலை தேவனிடமிருந்து பெற்று கொள்வோம் என்ற விசுவாசம் வேண்டும். சூழ்நிலைகள் நம்பிக்கையற்றதாக இருக்கலாம், ஆனால் நமது முழு நம்பிக்கையை தேவன் மேல் மாத்திரம்வைத்து, ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போமானால் தேவனிடமிருந்து நிச்சயமாய் பதிலை பெற்று கொள்வோம்.

எலியா மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருடம் ஆறுமாதம் பூமியின்மேல் மழை பெய்யவில்லை என்று வேதம் கூறுகிறது. எலியா தீர்க்கதரிசி நம்மைப் போல சாதாரண மனிதனாக இருந்த போதிலும், அவர் விசுவாசத்துடன் ஜெபித்தபோது, மழை பெய்யவில்லை. அவருடைய ஜெபம் சுருக்கமாக இருந்தாலும், அதை கருத்தாக ஜெபித்தார். தேவன் அந்த ஜெபத்தை கேட்டு பதில் கொடுத்தார்.

பாகாலின் நானூற்று ஐம்பது தீர்க்கதரிசிகளுக்கு முன்பாக தனி மனிதனாக மனிதனாக எலியா தீர்க்கதரிசி நின்று கர்த்தரே தேவன் என்பதை நிரூபிக்கும்படி ஒரு சிறிய ஜெபத்தைத்தான் செய்தார். (1இராஜாக்கள் 18:36-37). ஆனால் அது கருத்துள்ள ஜெபமாக இருந்தது. அவர் ஜெபித்தும் கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. (18:38) நம்முடைய ஜெபங்கள் சுருக்கவும் கருத்துள்ளதாக இருக்க வேண்டும். தேவன் மேல் முழு நம்பிக்கையும் வைத்து ஜெபிப்போம், பதிலை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வோம்.

எசேக்கியா ராஜா கடுமையான வியாதிப்பட்டு, மரணப்படுக்கையில் இருந்தார். கர்த்தரை நோக்கி தாழ்மையுடன் விண்ணப்பம் செய்கிறார். அவருடைய வேண்டுதலைக்

கேட்டு கர்த்தர் உடனே பதில் கொடுத்தார். முழுமையான சுகம் பெற்றான். நாமும் நம்பிக்கையோடு இயேசுவை நோக்கி ஜெபித்து நலம் பெறுவோம்.

அன்னாள், குழந்தைப்பேறு இல்லாததால் உறவுகளாலும், சமூகத்தாலும் பலவிதமான வேதனைகளை அனுபவித்தாள். அன்னாள் கர்த்தரிடம், கண்ணீரோடு வேண்டுகிறாள். அவளுடைய விண்ணப்பத்தின் படியே கர்த்தர் ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்து அவள் கண்ணீரை களிப்பாக மாற்றுகிறார். வேதனையோடு, கண்ணீரோடு இருந்தாலும், சமுதாயம் புறக்கணித்தாலும் இயேசுவிடம் முறையிடுங்கள், அவரால் முடியாத காரியம் ஒன்றுமில்லை, அவர் நாமம் அதிசயம்.

இயேசுவை மிகவும் நேசித்த மரியாள், மார்த்தாள் என்ற சகோதரிகளின் சகோதரன் லாசர் வியாதிப்பட்டு இறந்து விட்டான். இயேசு நான்கு நாட்கள் கழித்து அவ்விடத்திற்கு வருகிறார். லாசருடைய சகோதரிகள் இயேசுவினிடத்தில் வந்து **ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்** என்று கூறி அழுதார்கள். தன் அன்புக்குறிய நண்பன் லாசருவின் மரணம் இயேசுவையே கண்ணீர் விடச்செய்தது.

இயேசு அவர்களை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான். ***நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்*** என்கிறார். அதோடு ***நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்கிறார்.*** மரித்து நான்கு நாட்களான லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினார். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். இன்றைக்கு நாமும் ஏதோ ஒரு வேதனையின் சூழ்நிலையில், மனக் கஷ்டத்தோடும் பாரத்தோடும் தனிமை உணர்வில் இருக்கின்றோமா? நோயினால் வருந்துகிறோமா? மனதின் விருப்பங்கள் நிறைவேறாமல் தவிப்போடு இருக்கின்றோமா? எதிர்காலத்தைக் குறித்து கலக்கமடைகிறோமா? இயேசுவை நோக்கி ஜெபிப்போம், ஊக்கமுடனும், விசுவாசத்துடனும் ஜெபிப்போம், ஏற்ற நேரத்தில் அவரிடம் இருந்து ஆறுதலையும், விடுதலையையும், சுகத்தையும் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***

## செப்டம்பர் மாத தலைப்பு

# நல்ல ஆசிரியர்

# Good Teacher




## யோசபாத் ராஜாவின் ஜெபம்

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்திற்கு விரோதமாக மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யுத்தம்பண்ண வந்தார்கள். ஏராளனமான ஜனங்கள் தனக்கு விரோதமாய் சீயோனிலிருந்து வரும் செய்தி யோசபாத்திற்கு வந்து எட்டுகிறது. இந்த செய்தியைக் கேட்டு பயந்துபோன யோசபாத் என்ன செய்தார் என்று சற்று சிந்திப்போம்.

**கர்த்தரைத் தேடினான்**

பயந்து போன யோசபாத் கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான் (2 நாளா. 20:3). இந்த ஆபத்தான சூழ்நிலையை கையாளுவதற்கு கர்த்தருடைய ஞானமும், வழிநடத்துதலும் வேண்டும் என்றும் உணர்ந்து கர்த்தரைத் தேடினான். எஸ்தர் அகாஸ்வேரு ராஜாவின் கட்டளையில் இருந்து ஜனங்களை காப்பாற்ற யூதரெல்லாருக்கும் மூன்று நாள் உபவாசத்தை அறிவித்தாள். இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தை ஆரம்பிக்குமுன் 40 நாள் உபவாசித்தார். எந்த ஒரு சவாலையும் வாழ்க்கையில் சந்திக்குமுன் இயேசுவை ஜெபத்தின் மூலம் தேடுவது நாம் முதலாவது செய்ய வேண்டிய காரியமாகும்.

**ஜனங்களைக் கூட்டினான்**



கர்த்தருடைய ஆலயத்திலே யூதா ஜனங்களைக் கூட்டினான் (2 நாளா. 20:4). கர்த்தரிடத்தில் சகாயந்தேட யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள். ஒருமனப்பட்டவர்களாய் நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் அதிசயம் செய்வார். பேதுரு சிறைச்சாலையில் இருக்கும்போது சபையார் ஊக்கமாய் ஜெபித்தார்கள். பேதுரு விடுதலை பெற்றான். நாமும் யோசபாத்தை போல குடும்பமாக, சபையாக ஜெபிக்கும் போது கர்த்தர் கேட்டு பதில் தருவார்.

**கர்த்தரின் வல்லமையையும் வாக்குத்தத்தங்களையும் நினைவுகூர்ந்தான்**

ஜனங்களை ஜெபம் செய்ய அழைத்த யோசபாத், கர்த்தர் முன்பாக குறைகூறவோ, பயத்தோடு கதறவோ இல்லை. மாறாக சர்வ வல்ல கர்த்தரின் வல்லமையையும், அவருடைய பராக்கிரமத்தையும் கூறி, கர்த்தர் முன்பாக யாரும் நிற்க முடியாது என்பதை உறுதியாய் அறிக்கையிடுகிறார்(2 நாளா. 20:6).

பட்டயம், நியாயதண்டனை, கொள்ளைநோய், பஞ்சம் முதலான தீமைகள் வந்தால், உம்முடைய சந்நிதியில் இருந்து கூப்பிடும்போது இரட்சிப்பேன் (2 நாளா. 20:9) என்று கர்த்தர் அருளிய வாக்குத்தத்ததைக் கூறி, தங்களை பகைஞரின் கைகளில் இருந்து தங்களை காக்க வேண்டுமென்று மன்றாடுகிறார். தன்னை சுற்றியிருக்கிற பகைஞருக்கு நியாயம் செய்து பட்டயத்துக்கு தப்பவேண்டும் என்று ஜெபிக்கிறார். நம்முடைய சூழ்நிலை ஆண்டவருக்கு தெரிந்திருந்தாலும், நம்முடைய நிலைமையை அவருக்கு தெரிவித்து, அவருடைய வாக்குத்தத்தங்களின் படி நம்மை காப்பாற்ற வல்லவர் என்று சொல்லி நாமும் ஜெபிக்க வேண்டும்.

**கர்த்தரின் வார்த்தைக்கு செவிகொடுத்தான்**

ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன்மேல் கர்த்தருடைய ஆவி இறங்கினதினால், அவன் யோசபாத்துக்கும் ஜனங்களுக்கும் கர்த்தர் செய்யப்போகும் காரியத்தை அறிவித்தான். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்து இரட்சிப்பை அருளுவார் (2 நாளா. 20:17) என்று கூறினான். அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்து, அவனோடு கூட சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்குமுன்பாகத் தாழவிழுந்தார்கள். லேவியர் எழுந்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள்.



கர்த்தரின் வார்த்தைப்படி தைரியமாய் எதிரியை சந்திக்க நம்பிக்கையுடன் போனார்கள். ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்பாக, பாடகர் கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடினார்கள். அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, கர்த்தர் எதிரிகளை அவர்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் விரோதமாய் எழும்பப் பண்ணினார். முடிவில் அவர்கள் அழிந்தார்கள். யோசபாத்தும் அவன் ஜனங்களும் வெற்றி பெற்றார்கள். சத்துருக்களை கொள்ளையிட்டு, பெராக்காவிலே கூடி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். எருசலேமுக்குத் திரும்பிய அவர்கள் தம்புருகளோடும் சுரமண்டலங்களோடும் பூரிகைகளோடும் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்தார்கள். நன்மையை பெற்ற யூத ஜனங்கள் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்கள்.

நம்முடைய சூழ்நிலை எப்படிப்பட்டதாய் இருந்தாலும், கர்த்தரின் சமூகத்தில் அவர் வாக்கை நம்பி, அவர் சத்தத்துக்கு செவிகொடுத்து, நமக்கெதிர் வரும் சூழ்நிலையை துதியோடு சந்திக்கும்போது, கர்த்தர் நமக்காக யுத்தஞ்செய்து, நமக்கு வெற்றியைத் தருவார். நம் ஜெபம் நமக்கு ஜெயத்தைக் கொடுக்கும்.

**ஜெபசீலி ஆசீர்**

# வேதாகமப் பெண்கள்

## ஜெபமே ஜெயம் - அன்னாள்

### "சரியான இடத்தில் இருதயத்தை ஊற்றினாள்"

கிறிஸ்தவ வாழ்வில் ஜெபம் என்பது மிகவும் இன்றியமையாதது. ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு என்பார்கள். ஜெபம் என்பது ஆண்டவரோடு பேசுவது. நாம் பல நேரங்களில் நம்முடைய கண்ணீர் கதையை பலரிடம் சொல்லி அழுகிறோம். நம் கண்ணீரை, இருதயத்தை ஊற்ற வேண்டிய இடத்தில் ஊற்ற வேண்டும். அது எந்த இடம் என்றால் "கர்த்தருடைய சந்நிதி".

நமக்கு நன்கு அறிமுகமான குடும்பம் எல்க்கானா, அன்னாள், பெனின்னாள். "அன்னாள்" என்றால் "கர்த்தரின் கிருபை" என்று பொருள். எல்க்கானா சிறந்த ஆராதனை வீரன். அன்னாளும் தன் கணவனுடன் சேர்ந்து தேவனை ஆராதித்தாள். தேவ நியமப்படி ஆராதித்த கணவன் தான் எல்க்கானா. வருஷத்தில் மூன்று முறை ஆண் மக்கள் எல்லாரும் தேவ சந்நிதியில் குடும்பமாக காணப்பட வேண்டும். எந்த சாக்கும் போக்கும் சொல்லாமல் அன்னாளும் பின் தொடர்ந்தாள். தன் கணவனுக்கு பிரியமான மனைவியாய் இருந்தாள் அன்னாள். குழந்தையில்லை என்ற பிரச்சனை தனக்கும், தன் கணவனுக்கும் இடையில் பிரச்சனையாக உருவாக்க அவள் இடமளிக்கவில்லை. அழுது கொண்டிருக்கும் போதும், அவள் தன் கணவனை நச்சரிக்கவில்லை. மனைவியைப் பார்த்து, "ஏன் அழுகிறாய்?" என்று பரிவுடன் எல்க்கானா, பரிவு காட்டுகிறதைப் பார்க்கிறோம். உபத்திரவத்தில் பரிவு காட்ட கணவன் இருந்தும் அவள் குறை தீர்க்க அவள் ஆண்டவரால் மட்டுமே முடியும் என நம்பி தேவனை சார்ந்து கொண்ட அவளது விசுவாசத்தின் பிரதிபலிப்பே அவள் ஜெபம்.

அன்னாள் வீண் வார்த்தையை அலப்பாமல் ஒரே காரியத்திற்காக ஜெபித்தாள். தன் ஆண்டவரிடம், "உமது அடியாள்" என ஒப்படைத்தாள். ஒரு குழந்தையைத் தாரும் எனக் கேட்டாள். குறிப்பாக ஆண் குழந்தை வேண்டும் எனக்

கேட்டாள். அவனை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க விரும்பினாள். பொருத்தனை பண்ணி ஜெபித்தாள். ஏனோதானோ என்று ஜெபிக்காமல் தேவனோடு தீர்மானம் பண்ணி தேவ திட்டத்தோடு இணைந்து ஜெபித்தாள். துயரத்திலும், வேதனையிலும், தேவனிடம் கேட்டாள். அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.

நாம் அநேக நேரங்களில் ஜெபிக்கிறொம். கண்ணீரோடு ஜெபிக்கிறோம். அதன் பிறகும் துக்க முகமாய் இருக்கிறோம். நடக்குமா நடக்காதா என்று அவிசுவாசம் வந்து விடுகிறது. ஆனால் அன்னாள் விசுவாசத்தோடு ஜெபித்தாள். விண்ணப்பத்தை தேவன் பாதம் வைத்தாள். பிள்ளையைப் பெற்றுக்கொண்டாள். தேவனைத் துதித்தாள். பொருத்தனையை நிறைவேற்றினாள். அன்னாள் குழந்தையை தேவனுக்குக் கொடுத்தாள். அதன் பிறகு மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் தேவன் கொடுத்தார்.

நம் தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். பதிலளிக்கிறவர். தேவன் யாருக்கும் கடனாளியல்ல. திரும்பத் தருவார். ஒரு தாய் தன் பிள்ளைகளுக்காக ஜெபிப்பது போல் யாரும் ஜெபிக்க முடியாது. ஜெபிக்கும் தாய், பிள்ளைகளுக்கு தேவன் கொடுத்த பொக்கிஷம். ஜெபிக்கும் தாயார் தேசத்துக்கு தேவன் கொடுத்த ஈவு. பிள்ளைகள் பிறக்க மட்டுமல்ல. அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் ஜெபிக்க கடமை பட்டுள்ளோம். கர்த்தர் தாமே நம்மை ஜெபிக்கிற தாயாக, சகோதரியாக, பாட்டியாக, ஊழியக்காரியாக மாற்றுவாராக! ஜெபிப்போம். ஜெயம் பெறுவோம்.

**ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,

The theme this July/ August is "**PRAYER BRINGS VICTORY**".



Prayer is a way to communicate with God, share thoughts, seek guidance, and express gratitude. "Prayer brings victory because when we pray, we invite God to help us.

God is stronger than any problem we face! He listens to our prayers and gives us what we need — courage, strength, or even a way out.

In Jeremiah 33:3, God says "Call to Me and I will answer you..." Sometimes, God changes things around us, and sometimes, He changes us inside so we can win the battle!"




Did you know that Jesus prayed! The secret to Jesus' success in ministry was a lifestyle of prayer.


Jesus prayed to God because he had confidence in God. He prayed to be in communion with God, to be able to call upon God, and finally to seek God's will in all things.

## HOW TO PRAY FOR VICTORY





- 🙏 **PRAY WITH FAITH** – Believe that God hears and wants to help.
- ❤️ **PRAY WITH A GOOD HEART** – Be honest and humble.
- 🙌 **PRAY WITH THANKS** – Thank God before you see the answer.
- 🕊️ **PRAY FOR GOD'S WILL** – Ask God to do what is best, not what we expect.
- ⏳ **PRAY AND WAIT** – Trust that God's answer will come at the right time.

## SAYING IT WITH PICTURES…




Is any one of you in trouble? He should pray. - James 5:13 NIV




In the morning, Lord, you hear my voice;
in the morning I lay my requests before you
and wait expectantly. - Psalm 5:3 NIV


## NAMES OF GOD #7 JEHOVAH-JIREH

**Jehovah Jireh**: "The Lord Shall Provide"

In Genesis 22 we have the account of God calling Abraham and instructing him to sacrifice his promised son as a burnt offering on Mount Moriah.

And Abraham called the name of the place, The-Lord-Will-Provide; as it is said to this day, 'In the Mount of the Lord it shall be provided'" (Genesis 22:13-14).

**Daily Application -** We are deeply needy people, and sometimes we need emotional support, or financial help, or physical aid, or provisions related to an emergency or crisis.
In such times we can approach Jehovah-Jireh on the Throne of Grace. We can call Him that, for He is the God who provides.
**Relatable**…





Jake stared at his books, heart full of fear,
"God, help me," he prayed, with a silent tear.
He studied hard and gave his best try—
The grades came back—Jehovah Jireh was nigh!

# TINY TOTS SECTION

## COLOR IN...







# Lord's Prayer Maze

Our Father who art in heaven,
hallowed be thy name.
Thy kingdom come.
Thy will be done...



BibleWise

# Praying to Our Father



Jesus gives us many instructions on prayer in the Sermon on the Mount. Jesus continues his instruction, and gives us the Lord's Prayer (Matthew 6:9-13).

Trace the words from the Lord's Prayer. Use a blue crayon or marker to trace the name for God in these words.


"Our Father which
art in heaven,
Hallowed be thy
name."

## Break the Code - God Knows Our Needs

In the Sermon on the Mount, Jesus teaches us how to pray (Matthew 6:5-8).


Using the code below, decipher Jesus' loving message to us in verse 8 (CEB).






## Prayer Maze

Color the stars through the maze to piece together the prayer of Jabez.



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "PRAYER BRINGS VICTORY"

1. Who prayed, and the sun stood still so Israel could win the battle? (Josh.10:13)

a. Moses
b. Joshua
c. David
d. Samuel

2. What did King Hezekiah do when he received a threatening letter? 2 King (19:14)

a. Wrote back angrily.
b. Ignored it.
c. Prayed to God.
d. Ran away.

3. How did Daniel find victory in the lions' den? (Daniel 6:10 – 22)

a. He fought the lions.
b. He bribed the guards.
c. He hid all night.
d. He prayed and trusted God.

4. What happened when the church prayed for Peter in prison? (Acts 12:5 – 11)

a. He escaped by himself.
b. The prison collapsed.
c. An angel rescued him.
d. He stayed in prison.

5. Who prayed, and God sent fire from heaven to show He was the true God?

a. Elijah
b. Elisha
c. Moses
d. Jeremiah

6. According to Daniel 6:10, how many times a day did Daniel pray?

a. One
b. Three
c. Five
d. Seven

7. Who prayed in the temple saying, "Lord, be merciful to me, a sinner"? (Lk.18:13)

a. Pharisee
b. Priest
c. Tax Collector
d. Levite

8. What happened when Paul and Silas prayed and sang in prison? (Acts 16:25)

a. They were ignored.
b. The guards beat them.
c. The jail doors opened.
d. The fell asleep.

9. What did Jesus tell the disciples about prayer in temptation? (Matt. 26:41)

a. Fast and sing hymns.
b. Pray and go to sleep.
c. Watch and Pray; lest you fall.
d. Don't worry; I will pray for you.

10. What did Jesus do before he raised Lazarus from the dead? (John 11:41 – 43)

a. Prayed to the Father.
b. Called the disciples.
c. Wrote on the ground.
d. Cried only.

11. In Luke 6:12–13, what did Jesus do before he chose His twelve disciples?

a. Asked his family.
b. Prayed all night.
c. Cast lots.
d. Waited for a sign.


12. How many times should we pray in a day? (1 Thess. 5:17)

a. Few times
b. 5 times
c. 3 times
d. As often as you can

# FOURTH-QUARTER FAITH"

Sixteen-year-old Marcus lived for football. As the quarterback of his High school team, he carried both the pressure and the praise.

The state semi-finals had finally come. But Marcus was nervous.



The other team was undefeated. Bigger. Faster. Smarter.

In the locker room before the game, Marcus sat quietly, bowed his head, and prayed, "Lord, I can't do this alone. Help me to play with courage, not fear. Let this game be for You."

The first half was a disaster. Two fumbles. A missed throw.

Marcus could hear the whispers in the crowd, the disappointment in the coach's voice. At halftime, he sat on the bench, head low.

He remembered a verse his mom had taped to his mirror: "When I am afraid, I will trust in You." – Psalm 56:3

He whispered it now. "I trust You, Lord. Win or lose, I'm Yours."

The second half began.



Marcus played with new confidence—not reckless, but focused. He passed with precision, made smart plays, and encouraged his teammates.

Slowly, the scoreboard began to change. 14–21… then 21–21.

Final minute. One last chance. The play was risky. His wide receiver caught it—touchdown. The crowd exploded.

Marcus didn't raise his fists. He pointed his hands upward in Praise of God. Not because he'd won, but because he knew Who had helped him fight through fear.

Victory didn't just come through strength—it came through prayer, trust, and faith in the One who never fumbles.

## Unscramble — Pray in Secret

The Bible verses below are from Matthew 6:5-8 (CEB) and share Jesus' message about how to pray. Unscramble the words in red to complete the verses.

"When you y a p r, don't be like e i p h o c y r t s. They love to pray standing in the u n g s y e g s o a andon the e t r e s t corners so that people will see them. I assure you, that's the only reward they'll get. But when you pray, go to your room, shut the o d r o, and pray to your t r a F h e who is present in that c t e r e s place. Your Father who sees what you do in secret will w a d r e r you. When you pray, don't pour out a flood of empty words, as the



l e n G i t s e do. They think that by saying many words they'll be heard. Don't be like them, because your Father o k w s n what you d e n e before you k s a."

## MISSIONARY STORY - "The Rain That Came"

In a remote village in Africa, missionary Mary Slessor was facing a crisis. The land was dry. Crops had withered, and water was running low.

The villagers, who still followed tribal beliefs, mocked her faith. "Where is your God now?" they asked. Mary gathered the children she was teaching and said calmly, "Let's pray to the God who made the rain."

They bowed their heads, and Mary prayed simply, "Lord, show them You are real. Send rain, not for me—but for them."




That night, dark clouds rolled in. By morning, rain poured over the village for hours. The people were stunned. Their own rain dances had failed, but this woman's prayer had worked.

Many villagers came to Mary, asking about her God. That day, hearts opened—not just the skies.

Prayer brought not just rain—but victory for the Gospel.

# Hidden Picture

This group of friends is ready for a summer full of fun and learning! Can you find the hidden objects?




## Spot 10 Differences between the below pictures

## JESUS TAUGHT THE DISCIPLES HOW TO PRAY






# MISSIONARY JOURNEY

## APOSTLE # 7 BARTHOLOMEW

Bartholomew, originally named Nathaniel, was the son of Talmai, who lived in Cana.

After Jesus called Philip to follow Him, Philip found Nathanael and told him, "We have found the one Moses wrote about in the Law.

When Jesus saw him coming, He said, "Here is a true Israelite, in whom there is nothing false."




He was a scholar of the law and of holy men and is regarded as one of the Church's most active and bold missionaries.

Tradition indicates that Bartholomew was a minister of the gospel in Persia and India. There is no biblical record of his death, but all traditions agree that he died a martyr's death,

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of July/ August is: ______________________________.
2. How to pray for Victory - ______________________; ________________________; ____________________; ______________________; ________________________.
3. JEHOVAH JIREH means "__________________________________________."
4. ______________________was a missionary to a village in Africa.
5. James 5:13 says - ______________________________________________________
6. Bartholomew was otherwise called ____________________________
7. Psalms 56:3 says - ________________________________________________.

Children remember, pray without ceasing for this is the will of God in Christ Jesus concerning you (1 Thess. 5:17)

God bless,

**Mrs. Briliya Jeyaseelan.**

# Answers to June Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – "Come holy Spirit; Set us free"

1. c. Freedom
2. b. Holy Spirit comes upon them
3. c. The Spirit of life in Christ Jesus.
4. a. "Receive the Holy Spirit."
5. c. Joel
6. c. Spirit of adoption.
7. c. Pray in our weakness
8. b. Fruit
9. c. No condemnation for those in Christ
10. c. "Abba! Father!"
11. b. All things.
12. d. Holy Spirit

## Complete the Short Review Below…

8. The theme for the month of June is: **"Come Holy Spirit; Set us Free."**
9. The Holy Spirit sets us free from - **Sin; Bad Choices; Fear of Death; Pain and Sadness.**
10. JEHOVAH SHAMMAH means **"The Lord is There".**
11. **THE STORY OF JAYDEN**
    a. Jayden sat alone at the youth **Bible study** group.
    b. That night, the youth leader spoke about the **Holy Spirit**.
    c. Jayden looked up when the youth leader said – "The Holy Spirit doesn't wait for you to be **perfect**."
    d. He whispered – "Come **Holy Spirit**; Set me **Free**."
12. **Don Richardson** was a missionary to the **Sawi people** of Papua
13. God gave us His peace child—**Jesus**—to make peace with us.
14. **Matthew**, known as Levi, lived and worked in **Capernaum**
15. Matthew was the first person to record Jesus Christ's teachings in **Hebrew**.
16. The Holy Spirit is mentioned **12** times in the book of Matthew.
17. It was in Ethiopia that Matthew died a **martyr**.

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***




# MEMORY VERSE COMPETITION 2025

This year the Memory Verse Competition will be conducted during usual Junior church Timings. Date to be confirmed later.

**Beginners, Primary** and **Juniors** will need to orally recite their assigned memory verses, face to face, within the allocated time.

**Inters, Seniors** and **Super seniors** will need to come prepared to write the allotted portion from memory and submit it within 1 hour.

## MEMORY VERSE PORTIONS FOR 2025

| SECTIONS | 2025 | | |
|---|---|---|---|
| | Portions | No. of Verses | Allocated Time |
| Beginners A (KG. 1) | Psalms 23 + The Lord's Prayer | 11 verses | 10 mins. |
| Beginners B (KG. 2) | Psalms 103: 1,2;<br>Galatians 5:22 – 25<br>+ The Lord's Prayer | 11 verses | 10 mins. |
| Primary A (Gr. 1) | Psalms 119:1 - 16 | 16 verses | 15 mins. |
| Primary B (Gr. 2) | Psalms 1; 91 | 22 verses | 15 mins. |
| Primary C (Gr. 3) | Psalms 96; 97 | 25 verses | 15 mins. |
| Juniors A (Gr. 4) | Psalms 121 – 125<br>+ Books of the old Testament | 34 verses | 20 mins |
| Juniors B (Gr. 5; 6) | Psalms 119:41-80<br>+ Books of the old and new testament | 40 verses | 20 mins. |
| Intermediates (Gr. 7,8) | Psalms 119:121 - 176 | 56 verses [written - Ps. 119: 161-176] | 1 hr. |
| Seniors (Gr. 9) | Psalms 31: 1 – 24<br>Psalms 27:1 – 14<br>Psalms 34: 1 – 22 | 60 verses [ written - Ps. 34] | 1 hr. |
| Super Seniors (Gr. 10; 11; 12) | Psalms – 1; 23; 34; 91; 103; 121 | 80 verses [written - Ps. 103] | 1 hr. |

## Marking for Written Memory verse competition will be as follows:

- 1 mark will be awarded for every correct and completed verse.
- No marks will be deducted for punctuations.
- 0.1 mark will be deducted for each spelling mistake and missing grammar.
- 0.25 marks will be deducted for every missing keyword.
- 0.50 marks will be deducted for every 3 or more words missing (segment of a sentence)
- 1 mark will be deducted if there is no memory verse number, or if the order of the memory verses is interchanged. Partial verses will not be counted.
- Handwriting should be legible. No marks will be awarded, if the correcting teacher is unable to comprehend what is written.
- Final marks will be scored out of 10.

### Criteria for The Competition Awards will be as follows:

| Level | Oral recitation | Written Competition |
|---|---|---|
| Outstanding | No prompts | 9.8 - 10 Marks |
| 1st Prize | 1 – 2 prompts | 8 – 9.8 Marks |
| 2nd Prize | 3 – 5 prompts | 6 – 7.9 Marks |
| 3rd Prize | 5 – 10 prompts | 4 – 5.9 Marks |
| Participation | For reciting incomplete no. of verses | Less than 4 Marks |

# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

### (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. ஜெபம் பண்ணி என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது என்று துதித்தது யார்?
2. யார் ஜெபம் பண்ணி முடிக்கிறபோது அக்கினி வானத்திலிருந்து இறங்கி, ... பலிகளையும் பட்சித்தது?
3. ஜெபம் பண்ணும் போது கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணி ஒரு அற்புதத்தைக் கட்டளையிட்டார் - யாருக்கு?
4. பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி ராஜாவிடம் பேசினது யார்?
5. ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினது யார்?
6. ஜெபம் பண்ணி பாவ அறிக்கை செய்தது யார்?
7. ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தது யார்?
8. ஜெபம் பண்ணும் போது யாரைப் போலிருக்க வேண்டாம்?
9. பார்வைக்காக நீண்ட நேரம் ஜெபம் பண்ணுகிறவர்கள் யார்?
10. ஜெபத்தில் ஸ்தோத்திரப்பாட்டைத் துவக்குகிற தலைவன் யார்?
11. யாருடைய ஜெபம் அருவருப்பானது?
12. அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினது யார்?
13. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தது யார்?
14. ஜெபம் பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினது யார்?
15. நடுராத்திரியிலே ஜெபம் பண்ணி, தேவனை துதித்துப் பாடினது யார்?
16. மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினது யார்?
17. ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போன இருவர் யார்?
18. இயேசு ஜெபம் பண்ணின நேரங்கள் என்னென்ன?
19. இயேசு ஜெபம் பண்ணின இடங்கள் எங்கெங்கு?
20. முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணின நான்கு பேர் யார்?

## ஏப்ரல் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | தாவீது | சங்கீதம் 51:11 |
| 2 | இஸ்ரவேல் வம்சத்தார் | ஏசாயா 63:10 |
| 3 | மரியாள் | மத்தேயு 1:18 |
| 4 | யோவான் | லூக்கா 1:15 |
| 5 | சிமியோன் | லூக்கா 2:25 |
| 6 | ஸ்தேவான் | அப்போஸ்தலர் 6:5 |
| 7 | நசரேயனாகிய இயேசுவை | அப்போஸ்தலர் 10:38 |
| 8 | பர்னபா | அப்போஸ்தலர் 11:22,24 |
| 9 | சரீரம் | 1 கொரி. 6:19 |
| 10 | தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் | 2 பேதுரு 1:21 |
| 11 | தேவ அன்பு | ரோமர் 5:5 |
| 12 | வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் | அப்போஸ்தலர் 10 :44 |
| 13 | தாவீது | மத்தேயு 22: 42,43 |
| 14 | இயேசு | லூக்கா 3: 21, 22 |
| 15 | சீமோன் | அப்போஸ்தலர் : 8:18-20 |

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*

## ஜுன் மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1 Mrs. Ajita Ebi
2 Mrs.Desigta Jaison
3 Mr.Emmanuel
4 Mrs.Esther Pauline Rani
5 Mrs.Febell Jeevagi Thomas
6 Mrs.Geetha kannan
7 Mrs.Grace shekar
8 Mrs.Helen Sharmila Ray
9 Mrs.Hame RajaGuru
10 Mr.Jeba Jino
11 Mrs.Jasmine Sobha
12 Mrs.Jebaseeli Asir
13 Mrs.Jenila Gannraj.L
14 Mrs.Kishi Maher
15 Mrs. Malar Ernast
16 Mrs.Manuel Sarah
17 Mrs.Nandhini Rajkumar
18 Mrs.Peppin Jenson
19 Mrs.Persis John
20 Mr.Prawin Durai Sam
21 Mrs.Priya Ranjith Kumar
22 Mrs.Praveena Arun
23 Mr.Raja Guru
24 Mr.Salin Robert
25 Mrs.Selvi George
26 Mrs. Shobana Milton
27 Mrs.Sheeba Merlin
28 Mrs.Sheeba Herlin
29 Mrs.Sheneegah Stanly
30 Mrs.Sharmila Rajesh
31 Mrs. Shajeethe Gracy
32 Mrs. Subija Jino
33 Mrs.Sweetilin Frank
34 Mrs. Vithya Dinesh

## Children who answered June Bible Quiz

1 Aadhav Steve Matthew
2 Adelyn Victoria Jeyaseelan
3 Brightson Timothy Raj
4 Benson Immanuel Raj
5 Camryn Robert.S
6 Clement Dave
7 Daniel Vanya (RUWAIS)
8 Danion Lemuel
9 Darion Lemuel
10 Diuas Dinesh
11 Defina
12 Evaniya Sherin
13 Evangelia Sharon
14 Efrona
15 Effrin
16 Eion Jayden
17 EricJayden Seniors
18 Gabrilyn Hannah
19 Galvin Robert.S
20 Giana Elin
21 Hadriel Adventier
22 Janey Titus
23 Jaslin Shanna
24 Jaylan Paul Jino
25 Joanna Paul Jino
26 Johanan Paul Jino
27 Jerilyn Pushpam Nelson
28 Jevlyn Ana
29 Jeya Jehosheba Maher
30 Jim Scott
31 Jen Scudd
32 Jeffrey Samuel
33 Jenessa Johnson
34 Joel Abrakam
35 Joha Anit Manuel
36 Johan Sam Manuel
37 Jessica Eban
38 Jenilin Jose
39 Kavin Immanel
40 Kavi yalini
41 Kathryn Joan
42 Kev Shannen P.S
43 Liana Erin
44 Leona Juliet
45 Leonel I.J. Stalin
46 Linuel I.J. Sherwyn
47 Mishael Wesley
48 Nashley Vinod Kiran
49 Pristina samlynPrince
50 Rivqah Deby Rajkumar
51 Sam Jesvin Vincent
52 Starlyne Noble
53 Steffi Priscilla .R
54 Sherlyn Sana
55 Selvajesvin (Ruwais)
56 Yedidiah Arun (Ruwais)
57 Yovaan jairus (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

*இந்தியாவின் அப்போஸ்தலர்*

## குதிரை காட்டிய வழி

கர்த்தருடைய வழியால் தன்னுடன் குதிரை பேசியதைக் கேட்ட தோமா, தன் ஆவியில் மகிழ்ந்து, "எங்கள் ஆத்தும இரட்சகரே, உம்மிலிருந்து பாய்ந்து செல்லும் ஜீவ நீருற்று எங்கள் மனங்களை பரிசுத்தப்படுத்துவதோடு, அதை கறை படாமல் காப்பதற்காக நன்றி!

நல்ல மேய்ப்பரே, உம்முடைய ஆடுகளுக்காக உம்மையே கொடுத்தவரே, உம்முடைய மந்தையை விடுவித்து, நல்ல மேய்ச்சலண்டை மேய்ப்பவரே, நாங்கள் உம்மை மகிமைப்படுத்துகிறோம்!" என்று சொல்லி துதித்து, அந்தக் குதிரையின் மேல் ஏறி அமர்ந்தார்.

எல்லோரும் ஆச்சரியப்படத் தக்க விதத்தில், யாருடைய வழி காட்டுதலுமின்றி, அருகிலுள்ள பட்டணத்தின் வாசல் வரை அந்தக் குதிரை தோமாவை சுமந்து கொண்டு போனது.

## அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலையான பெண்

அந்தப் பட்டணத்தில், மரித்து மீண்டும் உயிரோடு எழுப்பப்பட்ட ஒரு வாலிபனின் பெற்றோர் வசித்து வந்தனர். தோமா அவர்களை சந்திக்கப் போனபோது, அசுத்த ஆவி பிடித்த ஒரு பெண் அவருக்கு எதிர்ப்பட்டாள். தோமா, அவளுக்குள் இருந்த அந்த அசுத்த ஆவியை வெளியேறும்படி கட்டளை இட்டார்.

உடனே அந்த ஆவி, "உனக்கு அருகிலிருக்கும் இந்த மனிதனின் அடைக்கலத்திற்குள் நீ இருப்பதினால், உன்னை என்னால் ஒன்றும் செய்ய இயலவில்லை" என்று சொல்லிக் கொண்டே வெளியேறிப் போயிற்று.

அந்தப் பெண் முழுவதுமாக அந்த அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபட்டாள். ஜனங்கள் அனைவரும் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

அப்போது தோமா அவர்களை நோக்கி, "இயேசு கிறிஸ்து உங்களைப் போன்ற தேவையுள்ள ஒவ்வொருவருடைய தேவையையும் சந்தித்தார்.

நீங்கள் உங்கள் உணவிற்காக மீன்களை சமைத்து சாப்பிடுகிறீர்கள். அனால், ஒருசில மீன்களையும், சில ரொட்டிகளையும் கொண்டு ஆயிரக் கணக்கானோர் திருப்தியாகச் சாப்பிடும் படியாக அற்புதங்களைச் செய்தார்!

உங்கள் ஒவ்வொருவருக்காகவும் இயேசு கிறிஸ்து மரித்தார்! தேவாதி தேவனாகிய, இரட்சகராகிய அவர் உங்களை பாவ வாழ்க்கையிலிருந்து விடுவிப்பார்!

நீங்கள் அவரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் ஆசீர்வதித்து, எல்லா விதமான கட்டுகளிலிருந்தும் உங்களை விடுவிப்பார்!

எனவே, உங்கள் பாவ வாழ்க்கையைக் களைந்து, கிறிஸ்துவுக்குள் ஆன ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, அவர்களுக்குப் போதித்தார்.

பின்பு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலையைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெண்ணுக்கும், இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பிய அந்தக் கூட்டத்திலிருந்த ஜனங்கள் அனைவருக்கும், அருகில் இருந்த ஒரு ஆற்றில் பாவ மன்னிப்பின் நிச்சயத்திற்கென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து, கர்த்தருடைய பந்தியில் அவர்களைப் பங்கு பெறும்படி செய்தார்.

**கர்த்தருடைய பந்தியில் தேவ கோபாக்கினை வெளிப்படுதல்**

கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்ற ஒவ்வொருவரும் தேவ பயத்தோடும், பக்தி உணர்வோடும் இருந்தார்கள். அவர்களுக்குள் இருந்த வாலிபன் ஒருவன், ஒரு பெண்ணை கொலை செய்து விட்டு, கொஞ்சம் கூட பயமில்லாம்ல, "அது யாருக்கும் தெரியாது!" என்கிற எண்ணத்தோடு, கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வந்திருந்தான்.

"அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுமுள்ளவர்களுமாய் இருக்கிறீர்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" (1கொரி.11:29,30) என்ற வேத வசனத்தின்படி, அபாத்திரனாக கர்த்தருடைய பந்தியில் அவன் பங்கு பெற்றபடியினால், திடீரென்று அவன் மீது தேவ கோபாக்கினை இறங்கியது. உடனே அவனது இரண்டு கைகளும் முழுவதுமாக செயலிழந்து போனது!

பிற விசுவாசிகள் இதை தோமாவிடம் அறிவித்தனர். தோமா அந்த வாலிபனிடம், "கர்த்தருடைய பந்தியில் விசுவாசத்தோடு, பரிசுத்த அலங்காரத்தோடு பங்கேற்பவர்களுக்கு ஆரோக்கியம் அல்லவா உண்டாகும்? உனக்கு இப்படி சம்பவித்ததின் காரணம் என்ன?" என்று கேட்டார்.

- **தொடரும்**

# துணுக்குகள்



## பாடல் பிறந்த கதை

பாமாலை 376 - பாவ சஞ்சலத்தை

What a Friend we Have in Jesus

1. பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண நண்பர்தான் உண்டே!
பாவ பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே;
சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்.

2. கஷ்ட நஷ்டம் உண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்;
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபம் காட்டுவோம்;
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பலவீனம் தாங்குவார்;
நீக்குவாரே மனச் சோர்பை,
தீய குணம் மாற்றுவார்.

இப் பாடலை இயற்றியவர் ஜோசப் ஸ்கிரீவன். 1819 ம் ஆண்டு அயர்லாந்தில் சீப்பாட்ரிக் என்னும் இடத்தில் பிறந்தார். திருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றார். அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

மணநாளுக்கு முன்தினம் மணப்பெண் குதிரையில் ஏறி ஒரு ஆற்றைக் கடக்க முயன்றபோது தவறி விழுந்து ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இதை ஆற்றின் மறுகரையில் நின்று பார்த்துக்கொண்டு உதவிச் செய்யக் கூடாமல் திகைத்து நின்ற ஸ்கிரீவன் மிகவும் வேதனைப்பட்டார். அதனால் அவர் மனநிலையும் பாதிக்கப்பட்டது. இத்துயரத்தை மறக்க 1845ல் தமது 25 ஆம் வயதில் கனடா சென்றார்.

ஆண்டுகள் உருண்டோடின. ஸ்கிரீவன் "பிளைமவுத் சகோதரர்" என்ற சீர்திருத்த சபையில் சேர்ந்தார். அச்சமயம் ஒரு பெண்ணை மணக்க விரும்பினார். மணநாளும் குறிக்கப்பட்டது. திருமணத்துக்கு முன் அந்த சபையில் சேர விரும்பிய அவளுக்கு ஒரு ஏரியில் ஞானஸ்நானம் கொடுத்தனர். தண்ணீர் மிகவும் குளிர்ந்திருந்ததால் ஜலதோஷம் பிடித்தது. அதைத் தொடர்ந்து அதிக காய்ச்சல் வந்தது அவள் மரித்துப் போனாள்.

இத்திருமணத்தின் மூலமாவது தன் மகன் சந்தோஷ வாழ்வு பெறுவான் என்று நம்பியிருந்த ஸ்கிரீவனின் தாயார் தாங்கமுடியாத துயரத்துக்குள்ளானார். தனது வேதனையின் மத்தியிலும் தன்னை நினைத்து வருந்தும் தாயை ஆறுதல் படுத்த ஸ்கிரீவன் 1855ஆம் ஆண்டு இந்த அருமையான பாடலை எழுதினார்.

இப்பாடலுக்கு ஸ்கிரீவன் கொடுத்த தலைப்பு "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்பதே. அவரை பராமரிக்க வந்த நண்பர் இப்பாடலின் கைப்பிரதியைப் பார்த்தார். அதைப்பார்த்து மனம் நெகிழ்ந்தவராக ஆச்சரியத்துடன் இப்பாடலை இயற்றியது யார்? என்று கேட்டார். அதற்கு ஸ்கிரீவன் "நானும் ஆண்டவரும் சேர்ந்து இயற்றினோம்" என்று தாழ்மையாய் பதிலளித்தார்.

இவ்வாறு மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவரால் இயற்றப்பட்ட இப்பாடல் சாங்கியின் முதல் தர நற்செய்தி பாடல் தொகுப்பில் இடம்பெற்றது. உலகமெங்கும் பல உயிர்மீட்சி கூட்டங்களிலும், ஜெபக் கூட்டங்களிலும் இன்றும் பாடப்பட்டு வருகின்றது. பாமர மக்களும் எளிதில் புரிந்துக்கொள்ளும் இப்பாடல் உலகிலுள்ள 4,00,000 கிறிஸ்தவ பாடல்களில் மிகவும் விரும்பி பாடப்படும் பாடல் என புகழப்பட்டது.

இப்பாடலுக்கு ‘Conqueror’ எனும் இந்த ராகம் John S Wiseman என்பவரால் அமைக்கப்பட்டது.

ஸ்கிரீவன் தன் வாழ்வின் கடைசி நாட்களை சுகவீனம், வறுமை, மற்றும் மனவியாகுலத்துடன் கழித்தார். இறுதியில் 1886ம் ஆண்டு தமது 66 வது வயதில் "நைஸ்லேக்" என்னும் ஊரில் ஒரு சிற்றாற்றில் தவறி விழுந்து மரித்தார்.



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – ஜூலை 2025

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 4 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 6 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை |
| 8 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 11 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 15 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 18 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 22 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 25 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 29 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | வியாழன் | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – ஆகஸ்டு 2025



| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 3 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை |
| 5 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 8 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 12 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 15 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 19 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 22 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 26 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 29 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 31 | ஞாயிறு | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள் – ஜூலை



| | |
|---|---|
| **04-07-25** | |
| பாமாலை – 2 | உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும் |
| பாமாலை – 390 | லோக நாதா, மண்ணோர் மீள |
| கீர்த்தனை – 230 & 124 | ஆண்டவர் பங்காக அனைத்தையும்<br>வா, பாவீ, மலைத்து நில்லாதே, வா |
| பாமாலை – 9 | பூலோகத்தாரே யாவரும் |
| **11-07-25** | |
| பாமாலை – 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை – 356 | களிகூறுவோம், கர்த்தர் நம் பட்சமே |
| கீர்த்தனை – 101 & 129 | வரவேணும் பரனாவியே<br>மகனே, உன் நெஞ்செனக்குத் |
| கீர்த்தனை – 320 | மங்களம் சதா – ஜெய - மங்களம் |
| **18-07-25** | |
| பாமாலை – 10 | போற்றிடு ஆன்மமே, சிஷ்டி |
| பாமாலை – 322 | கர்த்தாவை நல்ல பக்தியாலே |
| கீர்த்தனை – 102 & 148 | தீய மனதை மாற்ற வாரும்<br>தேவா, இரக்கம் இல்லையோ |
| கீர்த்தனை – 4 | சீர்திரியேக வஸ்தே நமோ நமோ |
| **25-07-25** | |
| பாமாலை – 16 | ஆ கர்த்தாவே, தாழ்மையாக |
| பாமாலை – 366 | அருள் நிறைந்தவர் |
| கீர்த்தனை – 206 & 156 | ஜெப சிந்தை எனில் தாரும்<br>ஐயையா, நான் வந்தேன் |
| பாமாலை – 33 | இந்நாள் வரைக்கும் கர்த்தரே |

# ஆராதனை பாடல்கள் – ஆகஸ்டு 2025



| | |
|---|---|
| **01-08-25** | |
| பாமாலை – 267 | போற்றும், போற்றும்! |
| பாமாலை – 367 | ஆண்டவா! பிரசன்னமாகி |
| கீர்த்தனை – 1 & 63 | சத்தாய் நிஷ்களமாய்<br>மகிழ், மகிழ், மந்தையே |
| பாமாலை – 37 | ஞான நாதா, வானம் பூமி |
| **08-08-25** | |
| பாமாலை – 3 | உன்னதம் ஆழம் எங்கேயும் |
| பாமாலை – 295 | அருள் மாரி எங்குமாக |
| கீர்த்தனை – 66 & 75 | எனது கர்த்தரின் ராஜரீக நாள்<br>இவரே பெருமான், மற்றப் |
| கீர்த்தனை – 322 | சூரியன் மறைந்து அந்தகாரம் |
| **15-08-25** | |
| பாமாலை – 375 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| பாமாலை – 236 | வாழ்க, எம் தேசமே! |
| கீர்த்தனை – 149 & 189 | பரனே திருக்கடைக்கண்<br>என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன் |
| கீர்த்தனை – 334 | இமயமும் குமரியும் எல்லைக் கடலுடை |
| கீர்த்தனை – 5 | சருவ லோகாதிபா, நமஸ்காரம் |
| **22-08-25** | |
| பாமாலை – 1 | ஆத்மமே, உன் ஆண்டவரின் |
| பாமாலை – 384 | யுத்தம் செய்வோம், வாரும் |
| கீர்த்தனை – 180 & 108 | ஆதாரம் நீ தான் ஐயா<br>விசுவாசியின் காதில் பட |
| பாமாலை – 25 | கர்த்தாவே, இப்போ உம்மை |
| **29-08-25** | |
| பாமாலை – 18 | எங்கும் நிறைந்த தெய்வமே |
| பாமாலை – 179 | தம்மண்டை வந்த பாலரை |
| கீர்த்தனை – 251 & 91 | ஞானஸ்நான மா ஞானத்திரவியமே<br>ராச ராச பிதா மைந்த |
| பாமாலை – 38 | நீர் தந்த நாளும் ஓய்ந்ததே |

# திருமறை பாட ஒழுங்குகள் – ஜூலை & ஆகஸ்டு 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-07-25 | தன்னலமின்றி கொடுங்கள் | 1 ராஜா. 17:1-16 | 2 கொரி. 8:1-15 | மாற்கு 14:3-11 | - |
| 11-07-25 | இறையியல் கல்வி | யோசுவா 4:1-9 | 1 தீமோ. 4:1-11 | மத்தேயு 13:1-9 | 26 |
| 18-07-25 | கிறிஸ்துவின் மந்தை | எசே. 34:11-23 | அப். 16:11-15 | யோவான் 10:1-6 | - |
| 25-07-25 | ஜெபம் | நெகேமியா 1:1-11 | யாக்கோபு 5:12-18 | லூக்கா 18:1-8 | 70 |
| 01-08-25 | அனைவருக்கும் நற்செய்தி | 2 ராஜா. 2:9-16 | 1 கொரி. 3:12-19 | மத்தேயு 10:16-31 | - |
| 08-08-25 | இயேசு கிறிஸ்துவின் மறுரூபம் | யாத். 24:12-18 | 2 பேதுரு 1:12-21 | லூக்கா 9:28-36 | 110 |
| 15-08-25 | சுதந்திர தினம் | யாத். 18:13-27 | அப். 15:22-29 | லூக்கா 20:20-26 | - |
| 22-08-25 | சிதைந்த சமூகங்களில் கடவுளின் சாயலை மீட்டெடுப்பது | மீகா 6:1-8 | கலாத்தியர் 15:20-28 | லூக்கா 4:16-21 | 113:1-9 |
| 29-08-25 | ஞானஸ்நானம் | ஆதி. 8:1-14 | கொலோ. 3:1-11 | யோவான் 3:1-8 | - |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 01-07-25 | நீதிமொழிகள் | 11:17-31 | Muroor |
| 08-07-25 | நீதிமொழிகள் | 12:1-14 | Mussafah |
| 15-07-25 | நீதிமொழிகள் | 12:15-28 | Tourist Club |
| 22-07-25 | நீதிமொழிகள் | 13:1-12 | Al Wadha |
| 29-07-25 | நீதிமொழிகள் | 13:13-25 | - |
| 05-08-25 | நீதிமொழிகள் | 14:1-11 | - |
| 12-08-25 | நீதிமொழிகள் | 14:12-24 | - |
| 19-08-25 | நீதிமொழிகள் | 14:25-35 | - |
| 26-08-25 | நீதிமொழிகள் | 15:1-17 | - |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Sasikumar | 502 |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



| BIRTHDAY - July | | |
|---|---|---|
| **Birth Date** | **Title** | **Name** |
| **1** | Ms. | Catherine Jesintha |
| **1** | Ms. | Sharon |
| **1** | Mr. | Rev. Adoni Manuel |
| **2** | Mrs. | Jenis |
| **3** | Miss. | Joshita Glyn |
| **5** | Mr. | Kannan |
| **6** | Mrs. | Anita Saul |
| **6** | Mrs. | Helen Sharmila |
| **6** | Mr. | George Kirubaharan |
| **7** | Mr. | Julian Christian. D |
| **7** | Mrs. | Shajeetha Gracy |
| **8** | Ms. | Darrylin Jill J |
| **9** | Baby. | Joanna |
| **9** | Mrs. | Jessie Vasanth |
| **10** | Mr. | Jeya Seelan Gabriel |
| **10** | Dr. | Simon Nicolas. R |
| **10** | Master | Eric Jayden |
| **12** | Mr. | Daniel Jebadurai |
| **13** | Dr. | Roshan Sam Robert |
| **14** | Ms. | Starlyne Noble |
| **14** | Baby | Austin Elroy Vigin |
| **14** | Ms. | Joanna Irene |
| **14** | Mr. | Jason Samuel J |
| **16** | Dr. | Benny Samuel. S |
| **16** | Mrs. | Annie Rosita |
| **16** | Master. | Jotham Berton. J |
| **16** | Master | Abishek Manuel |
| **16** | Mr. | Arun Jebastin Gnanaiah |
| **17** | Mr. | Jose Joseph Raj |
| **17** | Master | A. Darion Lemuel |
| **18** | Mr. | Jaison P |
| **18** | Mrs. | Masiha Starlin M.R. |
| **20** | Mrs. | Catherine Chris |
| **23** | Ms. | Adelyn Victoria Jeyaseelan |
| **24** | Mr. | David Crishanth Alexander |
| **24** | Mr. | Michael G |
| **25** | Ms. | Dafnie Marcia |
| **28** | Mrs | Dheenal |
| **29** | Mr. | Nestor Ingarshal. J |
| **29** | Miss. | Jenessa |
| **30** | Mr. | Vijay Ananth D |
| **30** | Miss. | Shanita Glyn |
| **31** | Mr. | Milton D T |

# BIRTHDAY - August

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Baby | Rivqah Deby |
| 1 | Master | M. Juan Samuel |
| 1 | Miss | M. Joanna Sharon |
| 1 | Baby | Ryan Alam |
| 2 | Ms. | Catherine Amy Beulah |
| 5 | Ms. | Jeya Jehosheba Mahear |
| 6 | Baby | Jaylene Darina |
| 6 | Baby | Janessa |
| 7 | Baby | Jaylan Paul Jino |
| 7 | Miss. | Abigail Presley |
| 8 | Mrs. | Prabha Selva Shaji |
| 9 | Mrs. | Catherine Jean S |
| 9 | Ms. | Asil Nithania |
| 12 | Mr. | Abraham Jebas Raja |
| 12 | Master | Albern Shaan |
| 14 | Ms. | Athina Shirlyn J |
| 15 | Mrs | Abisha Grace. S |
| 15 | Mrs. | Anu Monisha Rajesh |
| 17 | Ms. | Karen Tryphena |
| 17 | Baby. | Ashlyn Britney |
| 17 | Mr. | Daniel Abraham |
| 18 | Ms. | Ann Liya Vigin |
| 18 | Mrs. | Subi Mol R |
| 19 | Ms. | Stephany Jebarani Daniel |
| 20 | Mr. | Samuel Bhaskar W |
| 21 | Mrs. | Esther Angeline R |
| 22 | Baby | Breyson Shazil |
| 23 | Mr. | Jones Allen Sam |
| 23 | Mr. | Gnanaraj Murugesan |
| 24 | Mrs. | Grace Romona |
| 26 | Mr. | Nelson Prabhu |
| 26 | Mr | Kishor Raj |
| 27 | Baby | Jenilin |
| 28 | Mr. | Vigil Kumar Retnamony |
| 30 | Ms. | Gabrylla Sherrien |
| 30 | Baby | Jonarlin Vigil Kumar Yarah |
| 31 | Mrs. | Thukilaja |

| Wedding Anniversary - July | | |
|---|---|---|
| **Wedding Date** | **Title** | **Name** |
| 1 | Mr. & Mrs. | Jo Ernast D |
| 2 | Mr. & Mrs. | Nelson Prabhu |
| 2 | Mr. & Mrs. | Rajaguru Seker |
| 3 | Mr. & Mrs. | Asir Kanagaraj |
| 4 | Mr. & Mrs. | Charles Rajkumar |
| 4 | Mr. & Mrs. | Jaison P |
| 5 | Mr. & Mrs. | Prasanna Sekaran |
| 7 | Mr. & Mrs. | Selvin Samuel |
| 9 | Mr. & Mrs. | Kannan |
| 9 | Mr. & Mrs. | Abraham Jebas Raja |
| 9 | Mr. & Mrs. | Jeyakumar |
| 13 | Mr. & Mrs. | Nithin Sekhar |
| 14 | Mr. & Mrs. | Frank Santhosh Kumar |
| 24 | Mr. & Mrs. | Selvin Franklin N |

| Wedding Anniversary - August | | |
|---|---|---|
| **Wedding Date** | **Title** | **Name** |
| 8 | Mr. & Mrs. | Milton D T |
| 19 | Mr. & Mrs. Dr. | Rajakumar Manickam |
| 20 | Mr. & Mrs. | Selva Shaji |
| 22 | Mr. & Mrs. | Gunalan A |
| 23 | Mr. & Mrs. | Jason Samuel J |
| 24 | Mr. & Mrs. | Kedurin Raja S |
| 25 | Mr. & Mrs. | Stalin Raghu |
| 29 | Mr. & Mrs. | Yesudian Nayagam Eban |
| 31 | Mr. & Mrs. | Bamish P. |

# Our Father

who art in heaven,
hallowed be thy name.
Thy kingdom come.
Thy will be done
on earth as it is in heaven.
Give us this day our daily bread
and forgive us our trespasses,
as we forgive those
who trespass against us.
And lead us not into temptation,
but deliver us from evil.
For thine is the kingdom,
and the power, and the glory,
for ever and ever.
Amen.

Matthew 6:9-13